உ

சண்முகன் றுணை.

# இடும்பன் கவசம்,

## கடம்பன்கவசம்,

## அகத்தியப்பஞ்சகம்,

## சிவத்தியானலஹரி.

இந்நான்கும் அடங்கியிருக்கின்றன.

சென்னை: மநோன்மணிவிலாச

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1910.

இதன் விலை பை—6.

உ

சண்முகன்றுணை.

# இடும்பன்கவசம்.

## சிவத்தியானலஹரி.

சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியார்

இயற்றிய

## கடம்பன்கவசம்.

## அகத்தியப்பஞ்சகம்.

இந்நான்கும் அடங்கியிருக்கின்றன.

PRINTED AT THE

MANONMANI VILASUM PRESS

MADRAS.

---

இதன்விலை பை—சு.

உ

கணபதிதுணை.

# இடும்பன்கவசம்

காப்பு.

இடும்ப லிடும்பைகளீடழிக்கவந்த
இடும்பன் கவசமிது.

ஓம் அகஸ்தியர் சீஷா
அறுமுகன் தூதா
அடியேன் வல்வினை
யகற்றிட வருவாய்
செகத்தினி லெங்கும்
சிறந்து நின்றவனே
தகதக தகவென
சாரிகை வருவாய்
அண்டமும் பிண்டமும்
அதிரவே வருவாய்

மண்டலம் புகழ
வருவாய் கடம்பா
தண்டா யுதமுந்
தனிநீற்று நெற்றியும்
வண்டார் கடம்பா
வரவே சமயம்
கண்டமு மார்புங்
கரமிடை யழகும்
அண்டர்கள் போற்று
மாயுத வழகும்
எண்டிசை யதிரவே
யேறிய மிதியடி
தண்டையுங் கொலுசுஞ்
சரமுட னழகும்
அண்டர்கள் பரவும்
அடிமல ரழகும்
தண்டா யுதத்தொடு
தாண்டிநீ வருவாய்

வருவாய் வருவாய்
வல்லிடும் பேசா
வருவாய் பழனி
மலைக்குக் காவலா
இவ்வும் சவ்வும்
ஈசனே அரனே
வவ்வும் மவ்வும்
ஆகிய பரனே
சவ்வும் கிலியும்
ஐயுமா னவனே
வவ்வும் உவ்வு
மாய்வளர் துரையே
அவ்வும் உவ்வு
மாகிய கோவே
குறத்திமகனே
குறவன் குமரா
மறத்தி மகனே
வல்லிடும் பேசா

ஆறுமா முகத்தெம்
  மன்னவல்தன் றுணையே
வீறுடைத் தேவர்
  வேண்டும் பொருளே
இருப்புத் தடியு
  மிருகைவல் லயமும்
சுருட்டு வாளுந்
  தொங்கு சங்கிலியும்
எடுத்து வரவே
  இதுவே சமயம்
ராரா ராரா
  வென்னுயக விடும்பா
ராரா ராரா
  நமனு நடுங்க
றீரா றீரா
  றீங்கார சொரூபா
வாராய் வாராய்
  வல்லிடும் பேசா

வள்ளி யம்மைதன்
மைந்தனே ராரா
துள்ளிய நடையுந்
துண்டுத் தடியொடு
முள்ளு மிதியடி
முனைமேல் நின்று
சமயந் துரையே
சடுதியில் வருவாய்
சமய மிதுவே
தமியனை ரக்ஷியும்
உபய தாண்மல
ருண்மையாய் நம்பினேன்
அபய மரசே
அடியனைக் காக்க
ஓங்காரத் துடன்
ஒலிக்கும் றீங்காரா
ஆங்காரத்துட
னார்ப்பரித் தெழுந்து

ஜல்லடங் கட்டியே
 சாமிநீ வருவாய்
பில்லி சூனியம்
 பெலத்த ஏவல்கள்
துள்ளிய சடாமுனி
 சோதியா வாடையும்
பள்ளக் கறுப்பன்
 சாமுண்டி சாத்தன்
பள்ள வீரன்
 பத்திர காளியும்
மசானக் கரையில்
 வாழ்ந்திடும் பிசாசம்
பிசாசினுக் கெல்லாம்
 பெருந்தலை முனியும்
கறுத்த இருளன்
 காட்டேறி யக்ஷிணி
உருத்துப் பார்க்கும்
 உக்கிர முனிகளும்

கொள்ளிய தேளுங்
  கொடுவிஷப் பாம்பும்
பலவிட மெல்லாம்
  பறந்திட வெரித்து
பட்டு பட்டு
  பறந்திட எரி எரி
வெட்டு வெட்டு
  வேரைக் களைந்திடு
முட்டு முட்டு
  முடுகியே முட்டு
கொட்டு கொட்டு
  கூறிடக் கொட்டு
கட்டு கட்டு
  கடுகவே கட்டு
கட்டு கட்டென்
  மாற்றானைக் கட்டு
குத்து குத்துன்
  கூர்வேன் முனையால்

பற்று பற்று
பறந்திட் டோடக்
கண்விழி பிதுங்கிக்
கலங்கிட எரி எரி
விண்ணோர் புகழும்
வேலவர் தூதா
எரிஎரி எரிஎரி
ரணக்களம் போல
இறு இறு இறு இறு
பாசக் கயிற்றால்
முறிமுறி முறிமுறி
மூன்றுதுண் டாக்கிடு
படுபடு படுபடு
பல்லைப் பிடுங்கிடு
அடிஅடி பிடிபிடி
இடிஇடி சுடுசுடு
பார்த்திடும் பேர்களைப்
பார்வை யறுத்திடு

சத்துரு நாசனாத்
தணலெரி மூட்டிப்
புத்திர னழைக்க
புனிதநீ வருவாய்
ஊங்கிருந் தாலு
மென்னெதிர் வருவாய்
எங்கிருந் தாலு
மென்னெதிரியையடக்கு
சங்கிலி பூட்டிச் [வாய்
சதைத்திடு எதிரியை
துங்கமா மயிலோன்
றூதா வாவா
ஐயா விடும்பா
அறுமுகன் தூதா
வையா புரியில்
வளர்ந்து நின்றவனே
வடிவேல் வாசா
மந்திரி வருவாய்

அடியே னழைக்க
அன்புடன் வாவா
குற்ற மிருப்பினுங்
கோபங் கொள்ளாய்
நற்ருய் போல
நயந்துநீ வருவாய்
வருவா யீசா
வல்லிடும் பேசா
மேலை மலைக்கு
விண்ணிடும் பேசா
சோலை மலைக்குத்
தோன்றிடும் வாசா
பழனியில் வாசா
பங்கய நேசா
அரகரா வென்றவுன்
அடியனை ரக்ஷி
கடம்பா வென்றிட
காத்துநீ ரக்ஷி

இடும்பா வென்றே
 னென்றன்முன் வருவாய்
அடங்கா சத்துருவை
 அக்கினி மூட்டிடும்
அடங்காத பேரை
 அடைத்துவாயடைத்திடும்
இணங்காத பேரை
 யெடுத்து மறித்திடும்
வணங்காத பேரை
 வாளா லறுத்திடும்
ஆங்கார சொரூபா
 அடியடி பிடிபிடி
இடுஇடு சுடுசுடு
 இதுவே சமயம்
இதுவே சமய
 மென்றன்முன் வருவாய்
கடம்பா சரணம்
 கதிர்வேலா சரணம்

இடும்பா சரணம்
ஈசா சரணம்
சண்முகன் தூதா
சரணம் சரணம்
சரணம் சரணம்
தற்காத் தருளே.

இடும்பன்கவசம்
முற்றிற்று.



உ

கணபதிதுணை.

# கடம்பன்கவசம்.

## காப்பு.

கல்விகுண ஞானங் கருணைபொறை யீகைமலர்ச், செல்வியரு ளெல்லாஞ் சிறக்கவே - நல்ல, கடம்பொழியு மும்ம தத்தக் காரானை வாழ்த்தி, கடம்பன் கவசங் கழறு.

முருக முருக
முருக முருக
சரவண பவசிவ
சண்முக முருக
செந்தி நகரிற்
செறிந்திடு முருக
திருப்பரங் குன்றிற்
றிகழு முருக

பழனி மாமலை
　பதிந்த முருக
ஏரக மதினி
　லிலங்கு முருக
பழமுதிர்ச் சோலையிற்
　பயிலு முருக
குன்றக் குடியிற்
　குலாவிய முருக
திருவுரு மாமலை
　சிறந்த முருக
திருமலை யதனிற்
　றேறு முருக
வள்ளியூ ரதனில்
　வழங்கு முருக
கழுகு மலையிற்
　கனிந்த முருக
வாச கிரியில்
　வதிந்த முருக

விலஞ்சி யூரினில்
மிளிரு முருக
வேள்வி மாமலே
வேட்ட முருக
அடிப்பா டதனி
லமர்ந்த முருக
சிவகிரி யதனிற்
செய்ய முருக
மேட்டுக் குடியினில்
மேம்படு முருக
எண்க ணூரினி
லெழுந்த முருக
விராலி மலேயினில்
விளங்கு முருக
மயிலா சலத்தினில்
மகிழ்ந்த முருக
தணிகை யதனில்
சார்ந்திடு முருக

போரூ ரதனிற்
பொருந்திய முருக
வேங்கட மதனில்
விராவு முருக
சத்தி மலையிற்
றங்கிய முருக
நட்சத்திர மலை
நண்ணிய முருக
அருணா சலமதி
லழகிய முருக
சோமா சினியிற்
றோன்றிடு முருக
அவலூர் தன்னி
லார்ந்த முருக
சித்தர் மாமலை
சிறக்கு முருக
வேலுடை பட்டினம்
விரும்பு முருக

பேறை நகரிற்
பிறங்கிடு முருக
பூண்டி யதனில்
பொலிந்த முருக
உடுப்பை யதனை
யுகந்த முருக
கதிர்கா மத்தினிற்
கலந்த முருக
பலமலை யதனிற்
பயிலு முருக
அடியார் மனதி
லாண்ட முருக
ஏகாட் சரமா
யேய்ந்த முருக
பஞ்சாட் சரமாய்ப்
பதிந்த முருக
சடாட் சரமாக
சமைந்த முருக

அஷ்டாட் சரமா
யமைந்த முருக
பதார்த்த மூன்றெனப்
பகுத்த முருக
பதிநா னலவெனப்
பகர்ந்த முருக
பசுவின் செயலைப்
பணித்த முருக
பாசமொழிக்கப்
பயன்சொலு முருக
ஆணவ வினையை
யகற்றிடு முருக
காமியச் செயலைக்
கலக்கிடு முருக
மாயையின் ரொழிலை
மறித்திடு முருக
ஓம்ஓம் ஓம்ஓம்
ஓங்கார முருக

ஹ்ரீம் ஹ்ரீம் ஹ்ரீம் ஹ்ரீம்
ஹ்ரீங்கார முருக
ஐயும் கிலியு
மாகிய முருக
ஒளவும் சவ்வு
மான முருக
சசசச சரஹண
பவவோம் முருக
ரரரர ரஹணபவ
வசவோம் முருக
ஹஹஹஹ ஹணபவ
சரவோம் முருக
ணணணண ணபவச
ரஹவோம் முருக
பபபப பவசர
ஹணவோம் முருக
வவவவ வசரஹ
ணபவோம் முருக

பில்லி சூனியத்தை
பிரித்திடுமுருக
குட்டி மோகினியைக்
குலைத் திடுமுருக
காளி வோங்காளியைக்
கழித்திடு முருக
கறுப்பன் வீரப்பனைக்
கடிந்த முருக
இடாகினி தன்னை
யெரித்திடு முருக
துஷ்ட தேவதைகளைத்
தொலைத்திடு முருக
தலைவலி கண்ணோய்த்
தவிர்த்திடு முருக
குன்ம நோயதனைக்
கோறிய முருக
பீனிச வலியைப்
பெயர்த்திடு முருக

வாதபித்தத்தை
வதைத்த முருக
சன்னி காமாலையைச்
சதைத்த முருக
மூல ரோகத்தை
முறித்த முருக
பவுத்திர சோகையைப்
பதைத்திடு முருக
சூலைக் கிரந்தியைச்
சுழற்றிடு முருக
சிவய நமவென
சிவன்றரு முருக
வயந மசியெனும்
வரனருள் முருக
யநம சிவவெனும்
யதிதரு முருக
நமசி வயவெனும்
நலன்றரு முருக

மசிவ யாவெனும்
மறைதரு முருக
அரஅர அரஅர
அரஅர முருக
அரிஅரி அரிஅரி
அரிஅரி முருக
ஆறு முகங்க
ளான முருக
அயிலுஞ் சேவலு
மணிந்த முருக
வெண்டிரு நீறு
விளங்கிடு முருக
தையலார் வலேயைத்
தடுத்தாள் முருக
நாடக மயின்மிசை
நடமிடு முருக
மான்மகள் கோன்மகள்
மணந்த முருக

முதற் குருவாகி
முளைத்த முருக
புண்ணிய வடிவாய்ப்
பொலிந்த முருக
தாயினு மினிய
சாமியா முருக
என்பொரு ளாவியை
யேற்ற முருக
வேதாக மங்கள்
விளம்பிய முருக
ஊரும் பேரு
மொழிந்த முருக
பல்லுல கதனிற்
பதிந்த முருக
நோக்கா லென்னை
நோக்கின முருக
சோதி ரூபமாய்த்
தோன்றிய முருக

பூதி சாதனம்
புரிந்த முருக
சும்மா யிருவெனச்
சொல்லிய முருக
கந்த முருக
கடம்ப முருக
காக்க முருக
காக்க முருக
வாழ்க முருக
வாழ்க முருக
முருக முருக
முருக முருகனே.

கடம்பன்கவசம்
முற்றிற்று.

---

உ

சிவமயம்.

# அகத்தியப்பஞ்சகம்.

குகனே வருக களங்கமிலாக்
கோனே வருக கறைமிடற்றோன்
மகனே வருக மணம்பூத்த
மலரே வருக வோராறு
முகனே வருக சிவானந்த
முகலே வருக வடியாரின்
அகனே வருக பழனிமலை
யரசே வருக வருகவே. (க)

கந்தா சரண மயில்வேற்செங்
கரனே சரணங் காமாரி
மைந்தா சரணஞ் செந்திருமான்
மருகா சரணம் வறியேன்றன்

சிந்தா குலந்தீர்த் தருள்செய்யுஞ்
சேயே சரண மெமைக்காக்கும்
எந்தாய் சரணம் பழனிமலை
யிறைவா சரணஞ் சரணமே. (௨)

சிவமே போற்றி சிற்சபையோன்
செல்வா போற்றி கௌமாரர்
தவமே போற்றி விண்ணுலகத்
தலைவா போறறி யென்போல்வார்
பவமே யொழிக்க வந்தருளும்
பதியே போற்றி யந்நாளில்
அவமே பொடித்த பழனிமலை
யண்ணா போற்றி போற்றியே. (௩)

நாதா தருக நலமெல்லா
நண்பே தருக வுனைவேண்ட
போதா தருக மெய்ஞ்ஞானம்
புனிதா தருக கருணைமொழை

தாதா தருக கல்விகுணம்
தயையே தருக கேட்டவெலாம்
ஈதா வெனுமுன் பழனிமலை
யிறைவா தருக தருகவே. (ரு)

கூர்வேல் வாழி தேவர்தொழுங்
குமரன் வாழி நடனமயில்
சீர்மன் வாழி வலனுயர்த்த
சேவல் வாழி வள்ளிதெய்வப்
பேர்மான் வாழி பேசரிய
பெரியோர் வாழி செஞ்சாலி
ஆர்வண் பண்ணைப் பழனிமலை
யப்பன் வாழி வாழியவே. (கு)

அகத்தியப்பஞ்சகம்

முற்றிற்று.

---

தண்டபாணிதெய்வந்துணை.

உ
சிவமயம்.

# சிவத்தியானலஹரி.

இரங்கல் தாழிசை.

நீலகண்ட சோமசூர்ய வக்கினி நேத்ரசோபிதம், கோலமாங்கரிப் புலி குலாவுமான்மழுப்படை, ஏல மார் ஜடாதரமிடத்து லபத்னிகோமளம், சீலமார்கயிலைவாழ் பரஞ் சிவம் சிவம் சிவம். (க)

சகலலோகநாயகஞ் சதாசிவாய மாம்பரம், நிகிலதே மதைத்யபூத நிர்மலாயருபகம்அகிலபஞ்சபூதமா யஞதிசைவமாஞ்சுகம்,ஜகவிநோத பரஞ் சிவம்சிவம்சிவம்சிவம்சிவம்.

அச்சுதனயனும்பரடி வணங்கி வாழ்த்தவுங்,கச்சுபூண்முலைக்கௌ ரிகாதலோடுவெப்புற, மெச்சவான ரம்பைமார் வியன்கவரிவீசவு, மிச் சையற்ற நடன மெந்தையே பரஞ் சிவம் சிவம். (ந)

சுடலையாடுவான்கரக் கபாலது ளிதப்பிரியன்,சுடலையாடிடுங்குழா

ஞ்சுகிக்கவல்லதாயகன்படியிலோர்
துதித்திறைஞ்சும்பாநுகோடிசேக
ரன், திடசிவோகமேபரஞ் சிவம்
சிவம்சிவம்சிவம். (ச)

ஆலயம்பலவுள வநேகதேவர்
தாமுள, சீலமும்பலவுள தெருளு
ளோர் பலவுள, மாலையணமராதி
மாதவர்பலருள, காலகாலனே பர
ஞ் சிவம்சிவம்சிவம்சிவம். (ரு)

அங்குமிங்குமெங்குமா யாதியா
யனாதியாய், திங்கள்சூடிசெஞ்சடை
த்திகழநின்றபூரணம், துங்கமேவு
தொண்டர்கடுதிக்கநின்றதற்பரம்,
எங்களையனேபரஞ் சிவம் சிவம்
சிவம் சிவம். (சு)

முத்தராகிமூவராய்முதல்வராயி
லங்கிடும், பித்தனாகிநின்றசோதியே
சொலற்கரியதாம், ஒத்தனத்துமே
த்தவல்ல வொகுண்டலக் கனலெ
னும், அத்தனேபரன் சிவம்சிவம்
சிவம் சிவம். (எ)

ஞாலம்யாவையும்படைத்தான் முகத்தனேடுமால், சிலமாரடிமுடியுலாவித்தேடிக்காணுஞ, ஸ்தூலமாயிருந்தசோண சயிலனேகதித்தெழும், ஆலமுண்டகண்டனேபரஞ்சிவம்சிவம். (அ)

உலகில் வந்தசுந்தரர்க்கு வந்துதூதுசென்றவன், இலகுமப்பரைத்தடுத்து வின்பமாய்விழுங்கிஞேன், அலகிலாநரிகளைப் பரியதாக்கிவிற்றவன், திலகிறைந்தவஸ்துபோற்பரஞ் சிவமசிவம். (கூ)

முத்திசேர்த்திடும்ப்ரதாபமுக்குணத்துளதமாந், தக்கனைத்துணித்தவீர பத்ரதாணுதந்தவன், செக்கர்மேனியெம்பிரான் திருந்தகிலமியாதினும், மிக்கஞானியேபரஞ் சிவம்சிவம்சிவம். (௧0)

சிவத்தியானலஹரி முற்றிற்று.

# புத்தக விளம்பரம்.


| | | | |
|---|---|---|---|
| சப்தரிஷிவாக்யம்5500பாடல் | 4 | 0 | 0 |
| அருணாசலபுராணம் உரை | 0 | 12 | 0 |
| ஷை ரப்பு ஆப்பயிண்டு | 0 | 8 | 0 |
| சாதகாலங்காரம் | 0 | 8 | 0 |
| ஷை திக்கு கிளேஸ் கடிதம் | 0 | 12 | 0 |
| சேந்தன் திவாகரம்12-தொகு | 0 | 10 | 0 |
| விருத்தாசலபுராணம் | 0 | 10 | 0 |
| விஷ்ணுஸ்தல மான்மியம் | 0 | 8 | 0 |
| நந்தனார் சரித்திரக்கீர்த்தனை | 0 | 8 | 0 |
| திருக்கடந்தைபுராணம் | 0 | 8 | 0 |
| அரிச்சந்திரபுராணமூலம் | 0 | 8 | 0 |
| சப்தஸ்தல தேவாரம் | 0 | 8 | 0 |
| வேதாந்தபோதினி | 0 | 8 | 0 |
| பிரபுலிங்கலீலை மூலம் | 0 | 8 | 0 |
| கட்டளைக்கொத்து | 0 | 8 | 0 |
| செய்யுளிலக்கணம் | 0 | 8 | 0 |

வி. பி. போஸ்டில் அனுப்பப்படும்.

கோ. லோகநாதமுதலியார்.
மநோன்மணிவிலாசம்பிரஸ், நெ-29,
வைத்தியநாதமுதலி வீதி, சென்னை.